# ஜாமக்காரன்
# JAMAKKARAN

VOLUME - 3 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 4

APRIL 2019 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே

உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். இந்த மாத ஜாமக்காரன் மிக அவசரத்தில் எழுதிமுடித்தேன்.

இந்த மாதம் இந்தியாவின் மிகப்பெரிய மாற்றத்தை தேர்தல் மூலம் நாம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். நீங்கள் யாவரும் தேர்தலில் ஓட்டு அளித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இப்போது முடிவுக்காக நாம் ஒவ்வொருவரும் மிகவும் பாரத்தோடு ஜெபித்துக்கொண்டிருப்போம். நானும் ஜெபித்துக்கொண்டிருக்கிறேன்.

**யார் பிரதமர்? எந்த கட்சி ஆட்சியை பிடிக்கும் ?**

இப்படிப்பட்ட எதிர்பார்ப்பு என்னையும், உங்களையும் தூங்கவிடாமல் செய்தது. நம் ஆண்டவர் ராஜாக்களை உருவாக்குகிறவர். ராஜாக்களை தள்ளிவிடவும் அவரால் முடியும்.

தமிழ்நாட்டிலும் கர்த்தர் தம் கரத்தை நீட்டுவார். அவருடைய பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. நம்முடைய பாரத தேசத்தை ஆளுவதற்கு யாரை கர்த்தர் அனுமதிக்கிறாரோ அதை ஆமென் என்று சொல்லி ஏற்றுக்கொள்வோம்.

ஒன்று நிச்சயம். மிருக பெலத்தோடு ஆண்டுக்கொண்டிருந்த காவி கட்சியின் பெலம் இழந்துபோகும் என்பது உறுதி. ஆனால் ஆளப்போவது யார்? ரோ.13:1-5.

ஜெபிப்போம். நானும் ஜெபிக்கிறேன்.

பரீட்சை எழுதிய பிள்ளைகளுக்காக விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

பரீட்சை நேரம் அறிந்தபடியால் என் பயணங்களிலும் நம் வாசகர் பிள்ளைகளுக்காக ஜெபித்தேன். கர்த்தர் நம் பாரத தேசத்தை ஆசீர்வதிப்பாராக.

**டாக்டர்.புஷ்பராஜ்**

ஜாமக்காரன் JAMAKKARAN

# APRIL - 2019

# இடறாலாயிராதீர்கள்

## விசுவாசிகள், ஊழியர்கள் யாருக்கும் குறிப்பாக சபைகளும் இடறலாய் இருக்கக்கூடாது.

அப்போஸ்தலனாகிய **பவுல் கொரிந்து சபையரைப் பார்த்து,** "நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், **தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்**". (கொரிந்தியர் 10:33) என்றார்.

கொரிந்து, கிரீஸ் நாட்டிலிருந்த முக்கிய பட்டணங்களில் ஒன்று, கொரிந்து சபையாகும் இந்த சபையில் மட்டும் தான் கிரேக்கர்களும், யூதர்களும், பல பாஷைக்காரர்களும் அறிவாளிகளும், பணக்காரர்களும், அடிமைகளும் இருந்தனர். இவர்களில் அநேகர் விக்கிரக ஆராதனையை விட்டு மனந்திரும்பியவர்கள். இப்படி **பல்வேறு கலாச்சாரமுடைய மக்கள்** கூடி ஆராதித்தாலும், உங்களில் **எவரும் யாருக்கும்** இடலறாய் இருக்கக் கூடாது என்று பவுல் கூறுகிறார். நாம் செய்கிற எந்த ஒரு காரியமும் மற்றவர்களின் **இரட்சிப்பிற்கு** ஏதுவாக இருக்க வேண்டும். ஆனால் **இடறலாய்** மட்டும் இருக்க கூடாது . புசித்தாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும் தேவ நாம மகிமைக்காகச் செய்ய வேண்டும் என்று பவுல் கூறுகிறார். ஆனால் அதே சமயம் **நம் உணவும், உடையும் கூட** பிறருக்கு **இடறலாய்** இருக்கக் கூடாது. "**போஜனம்** என் சகோதரனுக்கு **இடறலுண்டாக்கினால்**, நான் என் சகோதரனுக்கு **இடறலுண்டாக்காதபடிக்கு**, என்றைக்கும் **மாம்சம் புசியாதிருப்பேன்**" (1 கொரிந்தியர் 8:13) என்று பவுல் கூறுகிறார்.

**எத்தனை சுயகட்டுப்பாடு** பாருங்கள்! **நாகரீகம்** என்ற போர்வையில் **பிறர் இடறும்படி உடை உடுத்துவதும் பாவம் தானே?** ஸ்திரீகளும், "**தகுதியான வஸ்திரத்தினாலும்,** நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், **தேவபக்தியுள்ளவர்களென்று** சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே **நற்கிரியைகளினால்**, தங்களை **அலங்கரிக்க வேண்டும்**" (1தீமொத்தேயு 2:10). நீதிமொழிகள் 7:10இல், "இதோ, **வேசியின் ஆடை ஆபரணந்தரித்த** ஒரு ஸ்திரீ **அவனுக்கு எதிர்ப்பட்டாள்**" என்று கூறப்பட்டுள்ளது. இதில் **ஒரு பெண்ணை 'வேசி'** என **அடையாளம் காட்டியது** (தோலோடு ஒட்டின லெகின்ஸ் போன்ற நவீன ஆடை உடுத்துகிறவர்களையும் தவறான நோக்கமுள்ளவர்கள் என்று அடையாளம் காட்டும்) **அவளது வஸ்திரமே.** வஸ்திரம் மட்டுமல்ல, **நம் பேச்சும்**, செய்கையும், **பார்வையும்கூட** பிறருக்கு நம்மை யார் என்று **வெளிப்படுத்திக்காட்டும்.** பத்சேபாளோடு **பாவம் செய்த தாவீதை** தேவன் நாத்தான் தீர்க்கதரிசி மூலமாய்க் **கண்டித்தார்.** "தாவீது செய்த

பாவ **காரியத்தினாலே** கர்த்தருடைய சத்துருக்கள் கர்த்தரை **தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால்** உனக்குப் **பிறந்த பிள்ளை** நிச்சயமாய்ச் சாகும்" (2 சாமுவேல் 12:14).

**எவ்வளவு பெரிய தண்டனை?** ஏழு நாள் உபவாசித்து அழுத்தும் கூடத் தாவீது ராஜா தேவ **தண்டனையிலிருந்து** தப்ப முடியவில்லையே! ஏன்? **பிறரை இடறச் செய்யும் பாவத்திற்கு** நிச்சயம் தண்டனை உண்டு என்பதனை உலகிற்குக் காட்டவே! உபவாசமும் கண்ணீரும் அவன் **பாவத்தின் விளைவைத் தடுக்க முடியவில்லை.** நாம் எந்தக் காரியத்திலாவது **பிறருக்கு இடறலாய்** இருக்கிறோமா? என் ஆராய்ந்து பார்த்து மனந்திரும்புவோம். பவுல் எழுதுகிறார் **"போஜனம்** என் சகோதரனுக்கு **இடறலுண்டாக்கினால்** நான் **என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு** என்றைக்கும் **மாமிசம் புசியாத்திருப்பேன்"** (1 கொ 8:13)

கர்த்தருடைய **சத்தருக்கள்** நாம் ஆராதிக்கிற கர்த்தரை **தூஷிக்க நீ காரணமாயிருந்த படியால்** உனக்கு பிறந்த பிள்ளை நிச்சயமாய்ச் சாகும் 2 சாமு 1:24. இது தாவீது செய்த பாவத்துக்கு கர்த்தர் கொடுத்த தண்டனை அறிவிப்பு தீர்க்கதரிசி மூலமாக வந்தது. **தேவன்** தம்மை **பரியாசம்** பண்ண ஒட்டார் எபே 6:7

- SELECTED

# E-mail

ஜாமக்காரன் கடந்த மாதம் வரவில்லை என்று சிலர் ஒவ்வொரு மாதமும் எனக்கு எழுதியிருக்கிறார்கள். நீங்கள் எழுதும் இ-மெயில் அல்லது கடிதத்தில் உங்கள் **பழைய விலாசத்தையும்** உங்களுக்கு **கொடுக்கப்பட்ட நம்பரையும், தொலைபேசி எண்ணையும்** எழுதினால் உங்கள் விலாசத்தை லட்சக்கணக்கான விலாச பட்டியலில் தேடும் நிலை ஏற்படாது. ஆகவே இனி எழுதுபவர்கள் எத்தனை முறை எனக்கு பழக்கமானவர்களாக இருந்தாலும் உங்கள் முழுவிலாசத்தையும் ஜாமக்காரனாகிய நான் மனதில் வைத்துக் கொள்ளமுடியாது. ஆகவே உங்கள் பழைய விலாசத்தையும்,புது விலாசத்தையும் தெளிவாக குறிப்பிடுங்கள். இந்த விஷயத்தில் உங்கள்ஒத்துழைப்பை நாடுகிறேன்.

புது விலாசம் எழுதி அறிவித்தால் e-mailக்கு அல்லது உங்கள் கடிதத்துக்கும் உடனே பதிலும் கிடைக்கும். ஜாமக்காரனும் தாமதிக்காமல் உங்கள் **புது விலாசத்தில்** அனுப்பிவைக்கப்படும். காணிக்கை விவரத்தை எழுதி அறிவிக்கிறவர்கள் உங்கள் **தொலைபேசி எண்ணையும்** மறக்காமல் குறிப்பிடுங்கள். **காணிக்கை கிடைத்த விவரத்தை உங்களுக்கு தொலைப்பேசியில்** உங்களுக்கு அறிவித்து உடனே தொலைபேசி வழியாகவே உங்களுக்காகவே ஜெபிப்போம்.

# ஒரு பிஷப் அவர்கள் எனக்கு எழுதிய பதில் கடிதம்...

ஒரு குறிப்பிட்ட டையோசிஸ் **பிஷப்** அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் நம் **டையோசிஸ்ஸில்** சபை மக்களால் நன்கு அறியப்பட்ட **பகிரங்க குடிகார ஆயர்கள்** 39 பேர். நீங்கள் எனக்கு எழுதிய ஆலோசனையின்படி இவர்கள் அத்தனை பேரையும் சபையிலிருந்து எப்படி நீக்குவது? எங்கு மாற்றுவது?

அவர்கள் **அங்கியை** நீக்கி ஆயர் ஊழியத்தை கொடுக்காமல் அவர்களை டையோசிஸ் **அலுவலகத்தில்** ஏதாவது வேலை கொடுக்க வேண்டுமானால் **எத்தனை பேருக்கு வேலையை உருவாக்குவது**. அந்த **குடிகார ஆயர்களின்** மனைவி-பிள்ளைகள் யாவரும் **என் காலை** பிடித்து கதறினார்கள். அந்த பிள்ளைகளின் பிற்கால வாழ்வுக்கு வழி உண்டாக்கவே அந்த ஆயர் மேல் நடவடிக்கை எடுக்காமல் நான் பொருமையோடு இருக்கிறேன் என்றார்.

**அன்பானவர்களே!**

☐ பிஷப் ஸ்தானத்தில் உள்ளவர்கள் கூறும் பதிலா இது? தன் **தொழில் சாலையில்** இவர் முதலாளியாக அல்லது மேனேஜராக இருந்தால் கப்பெனியில் வேலை சமயத்தில் குடித்துவிட்டு வேலை செய்யாமல் இருக்கும் தொழிலாளி 39 பேர்களையும் வேலை செய்ய அனுமதிப்பார்களா? நஷ்டம் யாருக்கு? சீக்கிரமே தொழில் சாலையை மூடிவிட வேண்டி வரும் அல்லவா? ஆனால் **திருச்சபை ஊழியம்** என்பது வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய தேவாதி தெய்வம் என்றவரின் சொந்த ஸ்தாபனம் அல்லவா? அதை தான் எழுதி கொடுத்த சட்ட திட்டம் அடங்கிய வேத புத்தகத்தின்படி நடத்த **கண்காணிகளாக** பிஷப்மாரை கர்த்தர் அனுமதித்துள்ளார். தன் **பதவி** என்ற தாலந்தை சரியாக பயன்படுத்தாத அந்த அதிகாரிடமிருந்து அந்த பதவியை பறித்து பயன்படுத்துபவரிடம் ஒப்படைப்பார். மத் 25:29, 30. அத்தோடு மட்டுமல்லாது, **பிரயோஜனமில்லாத** பதவியை சரியாக உபயோகிக்காத அவனை நரகத்தில் தள்ளுங்கள் என்பார். அப்படி பதவி பிடுங்கப்பட்ட கண்காணிப்பாளர்கள் பிஷப்மார்கள் பலர் நடக்க முடியாமல் பேசமுடியாமல் மரித்த பிஷப் ஒருவர், மரிக்காமல் படுத்த படுக்கையில் வீட்டோடு படுத்துகிடக்கும் பிஷப்மார் 3 நபர்கள் இன்றும் நம் கண் முன்னே உயிரோடு அழுதுக் கொண்டிருப்பதை காண்கிறோமே! கர்த்தருடைய வேலையில்

☐ அசதியாயிருப்பவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று வேதம் எச்சரிக்கிறது.(எரே.48:10)

☐ முதலாவதாக அறிய வேண்டியது **சபை** என்பது கர்த்தரின் சரீரம்:

அதில் அசுத்தத்துக்கும், **பாவத்துக்கும்** சிறிதளவும் இடம் கிடையாது **சாட்சியில்லா ஆயர்களுக்கு** சபையில் **ஊழியம் செய்யும் தகுதியே** கிடையாது!

இதில் **ஆயர்களின்** குடும்பத்தை மனதில் கருதி, பிள்ளைகளில் படிப்பு ஆகியவைகளைக் குறித்து பரிதாபப்பட்டு அவரை பதவியில் தொடர அவரோடு **சமரசம் செய்ய** வழியே இல்லை. **குடிகார ஆயர்கள்** சபைக்கு சாட்சியில்லாதவர்கள், அவர்கள் **ஆகானைப் போன்றவர்கள்.** இஸ்ரவேல் மக்கள் பாளையத்தில் வேதனை அனுபவிக்க **அந்த ஒரு ஆகான்** தான் காரணமாயிருந்தான் அவன் நீக்கப்பட்ட உடன் இஸ்ரவேல் மக்கள் மேல் உண்டாயிருந்த சாபம் முழுவதும் நீங்கிபோனது. **திராட்ச தோட்டத்தை** கெடுக்கும் **குழி முயல்களை** பிடித்து அழியுங்கள். திராட்ச தோட்டம் காப்பாற்றபடும் என்று வேத வசனம் கூறுகிறது.

நம் வேதத்தின் படி ஆலோசனை கொடுக்கவேண்டுமானால் அந்த **குடிகார ஆயர்களை** மற்ற ஆயர்களுக்கு பயம் உண்டாகும் படி சபைக்கு முன் **பகிரங்கப்படுத்த வேண்டும்** என்று இயேசு (மத்தேயு 18:17)ல் கூறியதை போல **சபைக்கு அறிவித்து** அவர்களை **ஊழியத்திலிருந்து நீக்கி** வைக்க பட வேண்டும்.

கிறிஸ்தவ ஊழியத்தில் (சபை ஊழியமானாலும், மிஷனரி ஊழியமானாலும்) **இரக்கம்,** தயவு, **மன்னிப்பு** என்பது ஊழியக்காரன் செய்யும் **தவறுகளுக்கு** மட்டுமே பொருந்தும் வேலையில் **ஒழுங்கில்லை,** ஊழியம் செய்யாமல் **ஏமாற்றுவது, பொய் சொல்வது,** குடும்ப பிரச்சனை, மேல் அதிகாரிகளிடம் **உத்தரவு பெறாமல்** சபையை விட்டு, அல்லது **பணியிடத்தை விட்டு** சொந்த காரியமாய் வெளியே அலைவது **ஊர்களுக்கு** சென்று வருவது இன்னும் இதை போன்ற பிரச்சனைகள் **தவறுகளாக கருதப்படும். தவறுகள்** திருத்த படலாம், **திருந்த சந்தர்ப்பம்** கொடுக்கலாம். ஆனால், **குடிபழக்கம்,** சபை பணம், **ஊழிய பணத்தில்** கொள்ளையடிப்பது **பாலியல் பாவதில் விழுந்தவர்** சபை மக்களிடம் **அடக்க ஆராதனைக்கு** பணம் வசூலிப்பது, **திருமணத்துக்கு , வீட்டு ஜெபத்துக்கு** வர வேண்டுமானால் **பணம்** கேட்பது, திருமணம் செய்தவர்களின் **சர்டிபிகட் ஒப்படைக்க** 30 ஆயிரம், 10 ஆயிரம், என்று **பேரம்** பேசுவது. ஒரு ஆயர் இப்படி கீழ்தரமாக நடக்கலாமா? **என்ன வெட்க கேடு இது!** இது என் சொந்த ஊர் சபையாகிய அஸ்தம்பட்டி CSI ஆலைத்திலேயே நடந்தது இப்படிப்பட்ட **ஆயரை** சபைமக்கள் எப்படி மதிப்பார்கள்? தாங்களே சபைமக்களுக்கு செய்ய வேண்டிய ஊழியத்துக்கு குறிப்பாக **ஏழை சபைமக்களிடமிருந்து** கூச்சம் இல்லாமல் கட்டாய பண வசூல் செய்வது என்பது **கேடு கெட்ட செயல் ஆகும். பிஷப் அவர்களுக்கு புகார்** அறிவித்ததும் பயனில்லை. ஆனால் இவைகளுக்கு மன்னிப்பும், எச்சரிப்பும் கொடுத்து, அப்படிப்பட்ட ஆயர்களுக்கு பிஷப்மார் எச்சரிப்பும் அறிவுரையும் வழங்க வேண்டும். இவைகள் **தவறுகள்** ஊழல்கள், திருத்தப்பட வேண்டியவைகள் ஆகும், அவர்களை திருத்தவும் முடியும்.

ஆனால் **குடிப்பதும், விபச்சாரம் போன்ற பாவங்களும் அப்படிப்பட்டதல்ல!** கிறிஸ்தவத்தின் **மைய உபதேசம் தானே பரிசுத்தம்!** அதை **சபைமக்களுக்கு போதிக்கத்தானே** சபையில் **ஆயர்களை** பாஸ்டர்களை நியமிக்கிறோம். அவர்கள் சொந்த **வாழ்க்கையிலேயே** சாட்சியில்லை என்றால் சபையில் **பீடம் ஏறி** என்ன பிரசங்கிப்பார்கள்? **வாலிபர்களுக்கு** எப்படி இந்த **ஆயர்கள்** வழிகாட்டுவார்கள்?

**மதுபானம்** குடிப்பது பாவம் என்று வேதம் திட்டவட்டமாக போதிக்கிறதே! CSI **லூத்தரன் ஆயர்களின் சினாட் மீட்டிங்க்கு** கமிட்டியினரை அழைத்தால் **அந்த ஆயர்களும்,** DC **மெம்பர்களும் தங்கும் அறைகளில்** இரவு **மதுபான பாட்டில்களை,** கூட்ட ஏற்பாடு

செய்பவர்கள் வினியோகிப்பார்கள். **விபூதி தட்டை** வைத்து நிற்கும் பூசாரிகள் கூட குடிக்காமல் **தெய்வ குத்தம்** வந்துவிடும் என்ற பயத்தோடு நிற்பார்களே!

பிஷப் **அனுமதியோடு** அந்த **ஆயர்களுக்கும்** மற்றவர்களுக்கும் சப்ளை செய்கிறார்கள். **குடிப்பழக்கம்** இல்லாத ஆயர்கள் கூட **என்றைக்காவது ஒரு நாள் தானே** என்று மற்றவர்களின் நிர்பந்தத்துக்கு ஆளாகி **குடியை பழகிகொள்கிறார்கள்.** இவைகளை கேட்க **அவமானமாக** இல்லை? **என் சபையை** பற்றி, என் சபைகளின் **ஆயர்களைப்** பற்றி இப்படி எழுதுவதால் என் மனம் படும் வேதனை கொஞ்ஜமல்ல!

☐ ஒருமுறை **என் அலுவலக** கம்ப்யூட்டரில் பத்திரிகை செய்தியை டைப் அடிக்க நேரமில்லாமல் நான் **வெளியூர்** கூட்டங்களுக்கு போகும் இடத்தில் **கூலிக்கு கம்ப்யூட்டரில் டைப் அடிக்கும்** DTP **சென்டர்களில்** செய்திகளை டைப் அடிக்க ஏற்பாடு செய்வேன், அப்போது **டைப் அடிக்கும்** இந்துமத பெண் சொன்னாள். **கிறிஸ்தவ சபைகளில்** கூட குருவானவர், பிஷப்மார், இவ்வளவு மோசமாக இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. நான் ஒரு **இந்துவானாலும்** மன ஆறுதலுக்காக சில முக்கிய விஷயங்களுக்கு வேண்டுதல் செய்ய **கிறிஸ்தவ ஆலயத்திற்கு** சென்று அங்குள்ள **ஆயர்களை** என் தலை மேல் கை வைத்து ஜெபிக்க கேட்டுக்கொள்வேன். ஆனால் உங்கள் எழுத்துகளை டைப் செய்யும் போது எங்கள் **இந்து பூசாரிகள்** கோவில் பூஜை நாட்களில் **தீட்டு இல்லாமல்**, குடியில்லாமல் **பயபக்தியாக பூஜை செய்கிறார்களே** என்றாள். ஆனால் நீங்கள் ஜாமக்காரனில் எழுதியபடி **கிறிஸ்தவ சபைகளில்** குடித்து கொண்டே பிரசங்க பீடம் ஏறி **பரிசுத்தத்தைப்பற்றி பிரசங்கிறார்கள், சில ஆயர்கள் விபச்சாரம்** செய்தும், டிச்சர்மார்களிடமும், சில பள்ளி சிறுமிகளிடமும் **ஆபாச விளையாட்டு** விளையாடுகிறார்கள் என்று நீங்கள் எழுதி இருப்பது எனக்கு **ஆச்சரியமாய் இருக்கிறது!** எங்கள் **இந்து தெய்வங்கள்** கண்ணைகுத்திவிடும், **தெய்வ குத்தம் ஏற்பட்டால் குடும்பத்துக்கும் கிராமத்துக்கும்** ஆபத்து உண்டாகும் என்று **பூசாரிகளும்,** பூசாரி **குடும்பங்களும் பயப்படுவார்கள்.** ஆனால் **பரிசுத்த தெய்வ** கிறிஸ்தவ சபையில் இப்படிப்பட்ட **பாவம், குடி, கொள்ளை பணம்** ஆகியவைகள் எப்படி டாக்டர்? உங்கள் **கிறிஸ்தவ சபைகளில்** நடக்கிறது? இந்த கேள்விக்கு நான் வேறு விதத்தில் அந்த பெண்ணுக்கு பதில் அளித்து அவள் டைப் அடித்ததை **திருத்தும் போது** அவளுக்கு பரிசுத்தத்தைப் பற்றியும்-மனிதர்களைப் பற்றியும் விளக்கம் கூறுனேன். அதன்பின் நான் என் பத்திரிக்கை மேட்டரை **புற மதஸ்தரிடம் டைப்** அடிக்க வெளியே கொடுப்பதில்லை. **புற மதஸ்தினர்** என் பத்திரிகையை தான் வாசித்து இப்படிப்பட்ட விஷயங்களை அறிந்துகொள்ளவேண்டும் என்பதில்லை. இப்போது **தினசரி பத்திரிக்கைகளில் ஆயர்களை** அங்கியுடனும், பிஷப்மார்களை அங்கியுடன் **கழுத்தில் சிலுவையுடனும் போலீஸ் தள்ளிக்கொண்டு** போகும் கண்றாவி காட்சிகளை தினசரி பத்திரிகைகளிலும் **வெளியரங்கமாக** பார்க்கப்படுகிறதே! கேரளாவில் இப்படிப்பட்ட காட்சிகளைத்தான் Asia Net என்ற சேனலில் கண்டு மிகவும் வேதனைப்பட்டேன்.

இதற்குகெல்லாம் ஒரே காரணம் **சபை தலைவர்கள் தான்** பல **பிஷப்மார்களுக்கு நிர்வாகம்** தெரியவில்லை. கேரளாவில் பல டையோசிஸ்களில் அதற்க்கென்று **சட்ட ஆலோசகர்களை** நியமித்துள்ளனர்.

ஆனால் இப்போதுள்ள பிஷப்மார் சட்ட ஆலோசகர்களை தங்கள் மேல் உள்ள **பலவித ஊழல்** வழக்குகளிலிருந்து **தப்பிக்கவே** அவர்களை தங்களோடு வைத்துள்ளனர் **அப்படிப்பட்ட சட்ட ஆலோசகர்களுக்கு** டையோசிஸ்ஸிலிருந்து **மக்கள் காணிக்கை** பணத்திலிருந்து **லட்ச லட்சமாக** வக்கீலுக்கும், கோர்ட்டுக்கும் கொட்டி கொடுகின்றனர்.

☐ முடிவாக நான் சொல்வது வேதத்தின்படி **சபையை** டையோசிஸ்ஸை நடத்த வேண்டிய பிஷப்மார்கள், தங்கள் நிர்வாகத்தில் தவறு செய்பவர்கள் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்க தயங்கக் கூடாது. **உறவினர்** என்றோ, **நண்பர்** என்றோ, **பெரும் பணக்காரர்** என்றோ பாராமல் **ஆயர்களில்** அல்லது **சபை மக்களில் மதுபானம்**, விபசாரம், **ஊழல்** இப்படிப்பட்ட **பாவங்கள்** செய்தவர்கள் மேல் **கடுமையான நடவடிக்கை** எடுக்கவேண்டும். **பாவத்துக்கு தண்டனை** கர்த்தர் தான் கொடுக்கமுடியும்! ஆனால் **பிஷப்மார்** ஆயர்கள்மேல் கடுமையான **நடவடிக்கை . . . . . . . . . . !** எடுக்க வேண்டும்! அல்ல என்றால் பிஷப்மாரிடம் கர்த்தர் கணக்கு கேட்பார்!.

1 தீமோ 5:20 **பாவம் செய்தவர்களை**, அவர்களின் குற்றசாட்டுகளை அறியும்போது "**மற்றவர்களுக்குப் பயமுண்டாக்கும்படி** பாவம் செய்தவர்களை (குடிகாரர்கள், விபச்சார குற்றசாட்டு, பண ஊழல்) **எல்லாருக்கும் முன்பாக** கடிந்து கொள், என்று எழுதப்பட்டுள்ளது.

☐ **சேலத்தில்** ஒரு ஆயர், ஆயர்களுக்கு மேல் **தலைமை பதவியிலும்** உள்ளவர் அவரை **இடமாற்றம்** செய்யப்பட்டபோது சுமார் 20 இடங்களில் உள்ள **CSI சபைமக்கள்** அந்த ஆயர் **எங்களுக்கு வேண்டாம்.** ஆயர்மார் இடமாற்றம் முடிவு ஆவதற்க்குமுன் அந்த குறிப்பிட்ட ஆயரின் ஒழுங்கினங்கள், லஞ்ஜம் வாங்கியதைக்குறித்து **எத்தனை கடிதங்கள்** ஒவ்வொரு சபையிலிருந்தும் **பிஷப் அவர்களுக்கு** அனுமதிக்கப்பட்டது. ஐயா தயவு செய்து **அவரை** மட்டும் எங்கள் சபைக்கு நியமித்து விடாதீர்கள், என்று முன் எச்சரிக்கையாக **பிஷப்புக்கு** விண்ணப்பித்துள்ளார்கள். பிஷப் அவர்கள் அந்த ஆயரைப் பற்றி மிகத் தெளிவாக அறிவார் ஆனால் அவர் மேல் பல வருடமாக ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

**பிஷப் பாடு** மகா வேதனை! எப்படியும் அந்த குறிப்பிட்ட ஆயரை இடமாற்றம் செய்தாக வேண்டும். அவர் ஒரு **சீனியர் ஆயர்.** ஆனால் அவர் **ஏராளமான குற்றசாட்டுக்கு** ஆளானவர். அவர் பண ஊழல் **வீடியோ ஆதாரத்தோடு டையோசிஸ்** முழுவதும் அறியப்பட்டது **அவர் பாவமும்** அறியப்பட்டது. ஆனால் **பிஷப் அந்த குறிப்பிட்ட ஆயர் மேல்** நடவடிக்கை எடுக்கப் பயப்படுகிறார்.

ஒரு முறை பிஷப் அவர்கள் தைரியமாக அவரை ஒரு சபைக்கு **போஸ்டிங் போட்டு** ஊழிய செய்ய போஸ்டிங் ஆர்டரும் அந்த சபைக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் அந்த சபைமக்கள் தங்கள் **சபை கேட்டுகளை** அடைத்து **பூட்டிட்டு** கேட்டுக்குள் சபை மக்கள் பலர் நின்று **ஆயரை திரும்பி போக** சொல்லி தங்கள் எதிர்ப்பை பகிரங்கமாக காட்டினார்கள். வேறு வழியின்றி ஆயர் திரும்பிவிட்டார்.

**என் அனுபவத்தில்** ஒரு ஆயரை சேலத்தில்உள்ள அனைத்து சபைகளும் **அவர் எங்களுக்கு வேண்டாம்** என்று கூறி **பந்தாடுவது**போல் துரத்தப்பட்டதை அறிந்ததும், **கண்டதும்** இதுதான் முதல் முறை ஆகும். அப்படி என்றால் **அந்த ஆயரைப்பற்றி** அனைத்து **CSI சபை** மக்களுக்கும் எத்தனை **வெருப்பு,** உண்டாகிவிட்டது அவர் தன் **சாட்சி இழந்த** நிலையில்

எப்படி பிரசங்கிக்கப்போகிறார்? பிஷப் அவர்களுக்கோ துணிந்து ஆயர்மேல் நடவடிக்கை எடுக்க **தைரியம் இல்லை.** காரணம் டையோசிஸ்ஸில் பாவம், **குடி** ஆகிய இவைகளால் அடிமையான **ஆயர்களின் எண்ணிக்கை** கூடிக்கொண்டே போகிறது. ஒருவரை தண்டித்தால் **அவர் யோக்கியமா?** அவரை மட்டும் **ஏன் தண்டிக்கவில்லை?** என்று மற்றவர்களை சுட்டிக்காட்டுகிறார்கள். அப்படிப்பட்ட கேள்விக்கு பிஷப் பதில் கூற முடியாது போகிறது! ஆகவே இந்த முக்கியமான காரியத்துக்காக அதிகமாக ஜெபிப்போம்.

## பெரும்பாலான CSI சபைகளின் பிரச்சனை

கடந்த ஆறு மாதங்களில் கேரளா, தமிழ்நாடு, கர்னாடகா, ஆந்திரா மாநிலங்களில் மொத்தம் 24 CSI சபை கண்வென்ஷனில் பிரசங்கித்தேன். ஒவ்வொரு சபைகளிலும் **இரண்டு பிரிவினர்** இருப்பதை கண்கூடாக **கன்னியகுமரி நாடார்-திருநெல்வேலி நாடார்.** இரண்டு பேரும் நாடார்கள் தான். ஆனால் ஒத்துப்போவதில்லை, இந்தியாவிலும் வெளிநாட்டிலும் இதே பிரச்சனை **பம்பாயில்** அந்த காலத்தில் பம்பாய் தாராவி தமிழ் சபையில் 1970 வருடம் கன்னியாகுமாரி நாடார்கள்- திருநெல்வேலி நாடார்கள் ஒன்றாய் சமாதானத்துடன் தான் ஆராதித்து வந்தார்கள். சில வருடத்திலேயே கன்னியாகுமரி டையோசிஸ் ஆயர் தான் வேண்டும் என்று ஒரு பிரிவினர்-அடுத்தவர் திருநெல்வேலியிருந்து ஆயர் வரவழைக்கவேண்டும் என்கிறார்கள். அனைவரும் ஒரே கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்வர்கள் தான். ஆதாம்-ஏவாள் காலத்திலிருந்து ஒரு மனித இனத்திலிருந்து பிறந்து வளர்ந்தவர்கள் தான். ஒரே பாத்திரத்தில் ஒரே அப்பத்தில் பங்கு கொண்டு **திருவிருந்து** எடுத்தவர்கள். ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள்போல் இருக்க வேண்டியவர்கள் பிரிந்தனர். பம்பாய் Parel என்ற இடத்தில் கன்னியாகுமரி நாடார்களும், தாராவியிலும் மற்ற இடங்களிலும் திருநெல்வேலி நாடார்களும் தனிதனி சபையாக ஆராதிக்கிறார்கள்.

மற்றொரு CSI சபையில் கர்நாடகா CSI டையோசிஸ், வெல்லூர் CSI டையோசிஸ் இங்கு 50% வன்னியர், 50% நாடார்கள் ஆனால் பிரச்சனையில்லாமல் ஆராதித்துக் கொண்டிருக்கிறார்கள் இரண்டு வருடத்துக்கு ஒரு முறை சபை எலக்ஷன் வரும் போது ஜாதி பிரச்சனை தலை தூக்கும் எப்படியோ அடங்கி போகிறது என்றாலும் உள்ளே புகைச்சல் உண்டு என்பதை அறிந்தேன்.

கோயமுத்தூர் CSI டையோசிஸ்ஸில் நாடார்கள் பிரச்சனை உண்டு. ஒரு குறிப்பிட்ட சபையில் குறிப்பிட்ட ஜாதியினர் பெரும்பான்மையாக இருப்பதால் பிரச்சனையில்லை.

டையோசிஸ்ஸின் கோயமுத்தூரில் சில ஊர்களில் சேலம் மாவட்டத்தில் பல சபைகளில் ஜாதி பிரச்சனை விட ஈரோடு மாவட்ட ஆட்கள் கை ஓங்கியும், மற்ற மாவட்டத்தில் ஈரோடு மக்கள் குறைவு-மற்றவர்கள் அதிகம். ஆனால் ஈரோடு மாவட்ட ஆட்களின் கை டையோசிஸ்ஸில் எல்லா இடத்திலும் ஓங்கியிருக்கிறது, தலித் மக்கள் என்ற கூட்டம் ஈரோட்டிலும் உண்டு தமிழ்நாட்டின் மற்ற இடத்திலும் உண்டு. இப்படிப்பட்ட பிரிவுகளில் உள்ளவர்கள் சபை ஆளுமை தங்களை சார்ந்த ஆட்களுக்கே என்று வெளியே தெரியாமல் உள்குத்து விளையாட்டை அரங்கேற்றி கொண்டியிருக்கிறார்கள்.

இது ஒற்றுமையில்லாமல் நீடித்து கொண்டேபோகும் போது போட்டியும், கோர்ட் கேஸ்களும்

பெருகிக்கொண்டு போவதால் இயேசுவின் சிலுவைப்பாடுகளின் காட்சிகள் இவர்களுக்கு கார்டூன் விளையாட்டு போல் காணப்படுகிறது. இவர்களுக்கு எப்போது ஒரு மனம் வரும்? நாம் யாவரும் ஒரே கிறிஸ்தவ குடும்பம் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்குள்ளும் உண்டானால் மாத்திரமே ஒவ்வொரு சபையிலும் ஒவ்வொரு வீட்டிலும் கிறிஸ்துவின் சமாதானம் நிலைக்கும் இல்லையென்றால் கிறிஸ்துவை பலமுறை இவர்களே சிலுவையில் அறைகிறார்கள் என்று கூறலாம்.

ஒரே இந்தியன் என்ற எண்ணம் ஒவ்வொரு பாஷை பேசும் மனிதருக்கும் உண்டானால் தான் ஒரே இந்தியா என்றும் நாம் யாவரும் இந்தியர்கள் என்ற பாசம் உறவு **அன்பு** உண்டாகும். அரசியல்வாதிகள் பலர் அரசியல் தலைவர்கள் பலர் உள்ளத்தில் இப்படிப்பட்ட சிந்தை உண்டாகியுள்ளது. ஆனால் பெரும்பாலான கிறிஸ்தவர் உள்ளத்தில் இல்லையே! அதே போல கிறிஸ்தவ சபைகளில் நாம் யாவரும் ஒரு தாய் மக்கள் சகோதர, சகோதரிகள் ஒரே இரத்தம் நம்மை இணைந்துள்ளது என்ற சிந்தை உண்டாகும் வரை CSI டையோசிஸ்-சபைகளில் பிரச்சனைகள் பிரிவினைகள் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்.

எத்தனை கண்வென்ஷனில் பிரசங்கம் கேட்டாலும் தனி ஒருவனாகிய கிறிஸ்தவனின் உள்ளத்தில் சரியான மனம் திரும்புதல் உண்டானால் மட்டுமே. திருமண்டலத்தில் ஜாதி ஒழியும், நீ எந்த ஊர்காரன் என்ற கேள்வி உண்டாகாது. ஊர்காரன் அடிப்படையில் பதவிகளும், இடமாற்றங்களும், பதவி உயர்வுகளும் கிறிஸ்தவ சபையைவிட்டு நீங்கும்.

அப்படி ஒரு மாற்றம் உண்டாகவில்லை எனில் பெரிய வெள்ளியன்று சிலுவை பாடுகளை தியானித்து 3 மணி நேரம் ஆராதிப்பது வீண். சிலுவைபாடுகளை நினைத்து அழுபவர்களின் அழுகை மாய்மாலமாக கருதப்படும். பெயர் கிறிஸ்தவனாக, பெயர் கிறிஸ்தவ ஆயராக அறியபடுவீர்கள். இயேசு அன்று எருசலேமின் கடைசி பயணத்தில் தேவாலயம் வியாபார ஸ்தலமாகமாறி போனதை கண்டு தான் கண்ணீர் விட்டார். இன்னும் கண்ணீர் விட்டுக் கொண்டியிருக்கிறார்.

வேதம் சொல்கிறது **"நீ பட்ச பாதத்தோடே ஒன்றும் செய்யாதே"** என்று தீமோ 5ம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளது. அத்தனை **குடிக்காரர்** ஆயர்கள் மேலும் **துணிந்து நடவடிக்கை** எடுத்து **அதன் ஆபத்தான விளைவுகளை** ஜெபத்தோடு **சந்திக்க பிஷப் தயாராக** வேண்டும் அல்ல என்றால் **ஊழியத்தின் தலைமை பதவியை ராஜினாமா** செய்வதை தவிர வேறு வழியில்லை. குடிக்கார ஆயர்கள் மேல் நடவடிக்கை எடுக்காவிட்டால் **ஆடைவரை திருப்தி** செய்யமுடியாது. சங் 143:10 **கர்த்தாவே உம்மை பிரியப்படுத்த என்னை போதித்தருளும்** என ஜெபிப்போம்.

**எழுதுகிற என்னை** போன்றவர்கள் சுலபமாக எழுதிவிடலாம், **ஆலோசனையும்** கூறலாம். ஆனால் **அந்த பிஷப் பதவியில் இருந்தால் தான்** அதன் பிரச்சனைகள் எத்தனை **கோரமானது** என்பது விளங்கும், என்றாலும் **நம் வாழ்கையில் சாட்சியிருந்தால்** நிச்சயம் எதைக் குறித்தும் பயப்பட வேண்டியதில்லை என வேதம் சொல்கிறது.

# CSI VELLORE DIOCESE GANDHI NAGAR CHRIST CHURCH (VELLORE)

வெல்லூரில் (காந்தி நகர்) பகுதியில் Christ Church (CSI) ஆலயத்தில் நடைப்பெற்ற 3 நாட்கள் கூட்டங்கள் மிகச் சிறப்பாக நடந்தேறின. தலைமை ஆயர் Rev. Sharma அவர்களும் நிர்வாக கமிட்டியினரும் கூட்ட





ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இவர்கள் காட்டிய அன்பும் உபச்சரிப்பும் சபைமக்கள் காட்டிய அன்பும் என்னை நெகிழச் செய்தது. மற்ற சபைகளிலிருந்தும் மக்கள் கூட்டங்களில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். என் ஜாமக்காரன் வாசக குடும்பங்களை அனேக ஆண்டுகளுக்கு பிறகு சந்தித்ததில் தேவனை துதிக்கிறேன். கர்த்தரின் நாமம் மகிமைபடுவதாக.

# CSI மாடரேட்டர் அவர்கள் மரண ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்



**Most Rev.**
**Thomas K. Oomman,**

**CSI மாடரேட்டரும்**, மத்திய கேரளா டையோசிஸ் **பிஷப்பு**மான **Most Rev. Thomas K. Omman** அவர்களுக்கு கடந்த மாதம் திடீர் என்று உண்டான **ஸ்ட்ரோகினால்** உடனே வெல்லூர் CMC ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு (ICU) அவசர கால **கண்காணிப்பு பிரிவு** அறையில் சேர்க்கப்பட்டார்.

இரண்டு நாட்களில் மரண கட்டத்தை கடந்தார். ஆனால் பேச **வார்த்தை வராமல்** போனது, கை கால் கொஞ்சம் பாதிப்பு ஏற்பட்டதாக கூறப்பட்டது. இப்போது கேரளாவில் கோட்டயத்தில் தன் வீட்டுக்கு கொண்டு போகப்பட்டார். இப்போது பேசவும் பயிற்சியும் மற்ற பயிற்சிகளும் கொடுக்கப்பட்டு கொண்டியிருப்பதாக அறிந்தேன். விவரம் அறிந்த அன்றே அவருக்காக ஜெபிக்கத் தொடங்கிவிட்டேன்.

☐ ஆஸ்பத்திரியில் சுயநினைவு வந்தபின் கர்த்தர் அவருக்கு தன்னை பரிசோதிக்கவும், தன் கையில் கொடுக்கப்பட்ட மிகப் பெரிய ஊழிய உத்திரவாதத்தையும் நினைவு கூற வைத்திருப்பார் என்று உறுதியாக சொல்லமுடியும்.

WCC என்று அழைக்கப்படும் World Church Councilலின் வேத வசனத்துக்கு விரோதமான **பிசாசின் நவீன** உபதேசதில் இவர் W.C.C.யோடுஒத்துழைக்க ஒப்பந்தம் செய்துக்கொண்டாரே! அது தான் **தேவ கோபம்** இவர் மேல் வர காரணமாக இருந்தது என்று நினைக்கிறேன்.

நல்ல தெய்வ பக்தியுள்ள குடும்பத்தில் பிறந்த இவர் அந்த W.C.C.யின் கட்டளைக்கு பணிந்து **வேத வசனத்துக்கு விரோதமான கொள்கை**கள் என்று அறிந்தும் தபசுகால 40 நாள் உபவாச ஜெப குறிப்புகள் என்ற பெயரில் **அறிக்கை** ஒன்றை தயாரித்து CSI **சினாட் வழியாக** தென் இந்தியாவில் உள்ள 24 டையோசிஸ் **பிஷப்மார்களும்** செயல்படுத்த கட்டளையிட்டாரே! அது நம் தெய்வத்தை மிகவும் துக்கப்படுத்திவிட்டது.

அந்த அறிவிப்பில் **விசுவாச துரோக** ஆலோசனைகளை அறிமுகப்படுத்தினார்:

1. சுற்று சூழல் பாதுகாப்பு என்ற பெயரில்,
   கடவுளை பூமி உருண்டையில் காண்போம்
   மரம் செடி கொடிகளில் காணலாம்
   கடவுளின் படைப்புகள் அனைத்திலும் கடவுளை
   காணலாம் என்றார் அந்த கடவுளை ஆராதிக்கலாம் என்றார்.
2. Earth Bible Sermons (Volume 1) கடவுளின் படைப்புகளை 10 கட்டளைகளில் இணைக்க வேண்டும் என்றார்.
3. Gender Equality பாலின சமத்துவம், Gender Equality Begining With The Church என்றார்.

இந்த நவீன உபதேசங்கள் நம் CSI சபைக்குள் கடந்து வராதபடி கர்த்தர் காத்தார் என்று நம்புகிறேன்

இது சம்பந்தமான மற்ற விபரங்களை அடுத்த மாத ஜாமக்காரனில் எழுதுவேன் என்று

நம்புகிறேன்.இது மிக ஆபத்தான உபதேசம் **சோதோம்- கொமாராவின்** பாவங்களை நம் CSI சபைகளில் பகிரங்கப்படுத்துதல் அல்லது இணைத்தல் சம்பந்தப்பட்டதாகும்.

3வது பாலினத்தவர் 3rd Gender என்று அழைக்கப்படும் அரவாணிகள், Homo Sexual-Lesbion இப்படிப்பட்ட பாவத்தில் அடிமைபட்டவர்களை சபைக்குள் இணைத்து சபை பொருப்புகளை அவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்பது.

இவைகளை குறித்து 2019 பிப்ரவரி மாத ஜாமக்காரனில் தெளிவாக மாடரேட்டரின் தவறான செயல்களின் ஆதாரத்துடன் புகைப்படத்துடன் வெளியிட்டேன்.

உலக நாடுகள் இந்திய சுப்ரீம் கோர்ட் யாவரும் இவைகளை **மனித உரிமை** என்ற பெயரில் இவர்களை ஒதுக்கவோ அவமதிக்கவோ கூடாது அப்படி செய்தால் நீதிமன்ற தண்டனைக்குள்ளாவார்கள் என்றது.

மேலே கூறிய இக்காரியங்கள் நம் தேவனை மிகவும் துக்கப்படுத்தி விட்டது. அப்போதே ஜாமக்காரன் எச்சரித்தான். அதன் சிறு தண்டனை தான் மாடரேட்டர் அவர்கள் இப்போதுப் படுத்த படுக்கையில் ஆக்கியது.

**விளைவு** CSIயின் 24 டையோசிஸ் முக்கிய திட்டங்கள் முடங்கி போயின. சுமார் 4 பிஷப்மார் அபிஷேகிக்கபட பல மாதங்களாக காத்துகிடக்கின்றனர்.

மாடரேட்டர் இவர்களை பிஷப் ஆக்க கைகளை **தலைமீது** வைக்க வேண்டும், வாய் திறந்து பேசி ஆசிர்வதிக்க வேண்டும். இந்த இரண்டும் செயல்படுத்த முடியாமல் மாடரேட்டர் இயங்காத நிலையில்படுத்து கிடக்கிறார்.

## இப்போது அவசரமாக செய்ய வேண்டியது.

தற்போதுள்ள மாடரேட்டர் அவர்கள் சுகம் ஆகும், வரை தற்காலிக மாடரேட்டரை எழுத்து மூலம் ஆயர்கள் பிஷப்மார் முன்னிலையிலும் **உதவி மாடரேட்டராக** நியமிக்க வேண்டும். அவர்கள் கைவைக்கவும் பிஷப்பாக்கவும் அதிகாரம் தானாய் உண்டாகும்.

இந்த ஆலோசனை கடந்த மாதம் அவரிடம் கூறப்பட்டதாக கூறினர்கள், ஆனால் மாடரேட்டரோ நான் எழுந்துவிடுவேன், பேசிவிடுவேன், கைகளை தூக்கி வைத்து அபிஷேக ஆசிர்வாதம் கூறுவேன் என்று நாட்களை தள்ளிக்கொண்டே போகிறார். ஆனால் மாடரேட்டர் எழுந்து நடமாட பேச மாத கணக்காகும் என்கின்றனர்.

என்றாலும் வரும் மே மாதம் வரை பார்ப்போம். இல்லையென்றால் மாற்று வழியில் புது பிஷப்மார்களை நியமிப்பது என்று முடிவுக்கு வந்துள்ளார்கள் என்று கேள்விபட்டேன் ஜெபிப்போம்.

மாடரேட்டர் WCC யின் பாவ செயலுக்கு இனி இணங்கமாட்டேன் என்று திர்மானித்தால் போதும் நிச்சயம் கர்த்தர் சுகம் தருவார், ஜெபிப்போம்.

மாடரேட்டரின் இந்த சூழ்நிலையில் இப்படி நான் எழுதி அறிவிப்பது குறிப்பாக மத்திய கேரள டையோசிஸ் மக்களுக்கும் மாடரேட்டரின் குடும்பத்தினருக்கும் மனவேதனை உண்டாக்கும் என்று அறிவேன். வேறு வழியில்லை, இந்த சூழ்நிலையில் நான் ஜாமக்காரனாய் (காவல்காரனாய்) இல்லையெனில் கர்த்தர் என்னிடம் கணக்கு கேட்பார்.

# மிஷனரி அழைப்புக்காக காத்திருக்க வேண்டாம்

**ஜாமக்காரன்: மிஷனரி** ஊழியத்தின் **அவசியத்தை**ப்பற்றி ஒவ்வொருக்கும் புரிந்திருக்க வேண்டும். மிஷனரி ஊழியத்துக்கு **ஆத்தும பாரம்** தான் **முதல் தகுதி.**

**அடுத்தது:** மிஷனரி ஊழியத்தின் **கஷ்டங்களை, சவுகரியங்கள் இல்லாத** சூழ்நிலையை மிஷனரிகளாக போகிறவர்கள் புரிந்திருக்கவேண்டும். **மிஷனரி ஊழியத்தினால் உண்டாகும் இழப்புகளை குறித்தும் எதிர்பார்த்தவர்களாக இருக்கவேண்டும்.**

## Bro. டேவிட் சிட்டன் அவர்கள் கீழே எழுதப்பட்டதை வாசியுங்கள்

☐ **மிஷனரியாகச்** செல்ல ஒருபோதும் நான் **அழைக்கப்படவும் இல்லை,** பணியமர்த்தப்படவும் இல்லை ஆனால் **நானே தான் அதற்காக முன்வந்தேன்.** ஒரு **தனிப்பட்ட அழைப்பு** அதற்கு **அவசியமாக இருக்கவில்லை.** மிஷனரியாக செல்வதை **நானாகத் தெரிந்துகொண்டேன்**; செல்ல விரும்பினேன்; செல்ல நான் உந்திதள்ளப்பட்டேன். நான் **எங்கு செல்லவேண்டும்**! என்பதைத் **திறந்த வேதாகமும்,** கிறிஸ்து இன்னும் **எங்கு அறியப்படவில்லை** எனக் காட்டும் விரிக்கப்பட்ட **வரைப்படமும்** தான் என் மிஷனரி ஊழியத்தை **நிர்ணயித்தன,** என்கிறார் “Reckless Abandon and to Every Tribe with Jesus” என்ற புத்தகத்தை எழுதிய **டேவிட் சிட்டன்.** மிஷனரி ஊழியம் என்பது **வியத்தகு அழைப்பு** அது **வழக்கமான செயல்** அல்ல.

வேதமாகத்தில் **ஒரு சில நபர்களே** தமஸ்கு சாலையில் **பவுல்** அப்போஸ்தலனுக்கு விடுக்கப்பட்ட **மிஷனரி அழைப்பைப்** போன்ற **வியக்கத்தகு அழைப்பைப்** பெற்றனர். பவுலின் சகபணியாளர்களாயிருந்த **பர்னபாவைப்பற்றியோ** அல்லது **சீலாவைப்பற்றியோ** நாம் இத்தகைய **வியக்கத்தகு சம்பவங்களை** வாசிக்கவில்லை. அப்படியே **பன்னிரெண்டு அப்போஸ்தலர்களின்** மிஷனரி அழைப்பைப்பற்றியும் நாம் **மயிர்கூச்செரியும் கதைகளைப்** படிக்கவில்லை. ஆனால் **அவர்கள் அனைவரும் கிறிஸ்து அறியப்படாத** தேவையுள்ள தேசங்களுக்கு **மிஷனரிகளாகச் சென்றனர்.** சிலர் பத்தாண்டுகளுக்குள்ளாக பூமண்டலத்தின் நாற்கோடிகளுக்கும் சுவிசேஷம் எடுத்துச் செல்லப்பட கருவியாக அமைந்தனர். பொதுவாக

**ஓரிடத்தின் தேவையை அறிந்துக்கொள்ளும்போது**, அவர் **உள்ளத்தில் மிஷனரியாகப் புறப்பட்டு செல்வதற்கான தீப்பொறி** ஏற்படுகிறது. ஆகவே **தேவையின் அடிப்படையில்** உந்தப்படுதலே **மிஷனரியாகச் செல்வதற்கான** இயல்பான முறைமையாகும். Never ignore a Nudge or Whispher from God.

## ஏசாயாவின் அழைப்பு:

ஏசாயாவின் **ஊழிய அழைப்பு** ஏசாயா புத்தகத்தின் 6ஆம் ஆதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அது **பிரமிக்கத்தக்க காரியங்களை** உள்ளடக்கியிருந்தாலும், மேலே சொல்லப்பட்ட உண்மையை உறுதி செய்வதாக உள்ளது.

**முதலாவதாக**, ஏசாயா **தேவனைப்பற்றிய தரிசனத்தைப்** பெற்றுக்கொள்ளுகிறார். அவர் தேவனை **சர்வ அதிகாரம் படைத்த அரசனாகக்** கண்டார். அதோடு அவர் முற்றிலும் **பரிசுத்தமானவர் என்பதையும்** உணர்ந்துக்கொண்டார். இந்த அறிவானது **தான் பரிசுத்தம் அற்றவன்** எனவும், அதற்கான **தண்டனை மரணம் எனவும்** ஏசாயாவை உணரச் செய்தது. மேலும் அவர் வாழ்ந்த **சமுதாயத்தின் பாவத்தையும்** உணர்ந்துக்கொள்ள அது வழி வகுத்தது. ஏசாயா **தன் பாவத்தைக்**குறித்து **மனங்கசந்தபோது**, கர்த்தர் கிருபையாக **அவரை மன்னித்தார்**. அப்போதுதான் அவர் தன் சமுதாயத்தினுடைய **பாவத்தின் அகோரத்தை** இன்னும் ஆழமாக உணர்ந்தார். அவர்கள் மனந்திரும்பி ஆண்டவரோடு ஒப்புரவாக வேண்டிய **அவசியத்தையும்** நன்கு அறிந்துக்கொண்டார். இப்படி ஏசாயா **தன் மக்கள் தேவனிடத்தில் திரும்ப வேண்டிய** அவசியத்தினால் பாரப்பட்டபோது, **தேவன் அவரைத் தன்னுடைய தீர்க்கதரிசியாக மாற்றினார்.**

அன்பு நண்பனே, நாம் சேவிக்கும் **தேவனுடைய பரிசுத்தத்தை** உன்னுடைய **அகக்கண்கள்** கண்டிருக்கிறதா? **பரிசுத்தமாக வாழ வேண்டியதின்** அவசியத்தைப் புரிந்து கொண்டிருக்கிறாயா? **உன்னுடைய தாய் நாட்டினரின் இரட்சிப்பைக்**குறித்த பாரத்தை உனக்கு தேவன் கொடுத்திருக்கிறாரா? அப்படியானால், எந்தவொரு **கிளர்ச்சியூட்டும் அனுபவத்திற்கும் நீ காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.** "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும், பிழைத்திருக்கிறேன் இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்கு பிழைத்திருக்கிறார்" என்று சொன்ன பவுலைப்போல **உன்னை முழுவதுமாகக் கர்த்தருக்கு அர்ப்பணி** (கலாத்தியர் 2:20).

நாம் தாய் நாட்டின் தேவைகளைக் குறித்து இன்னும் அறிய முற்படு. **விசுவாசத்தோடு முன்னேறு.** ஆண்டவர் **சரியான வழியை உனக்கு முன்பாகத் திறக்கச் செய்வார்.**

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.



வெல்லூர் (காந்தி நகர்) **சகோ. வின்ஸ்டன்ட்** வயது 78 அவர்கள் 19.3.2019 இருதய துடிப்பு நின்று போய் கர்த்தருக்குள் மரித்துப்போனர்.

கர்த்தருக்குள் மரித்தார் என்று நான் குறிப்பிட காரணம் மரணம் தன்னை நெருங்கிவிட்டது என்பதை அறிந்து அதற்கான ஆத்தும் ஆயத்தம் செய்ய நேரம் கிடைத்தது.

வேறு பரிசோதனைக்காக CMC வெல்லூர் ஆஸ்பத்திரி சென்ற அவர் டாக்டர் வர சிறிது தாமதமான அந்த நேரத்தில் தன் இருதய துடிப்பில் வித்தியாசம் உண்டாவதை உணர்ந்து உடனே 3 வீலர் (ஆட்டோ) வில் புறப்பட்டு தன் வீட்டு தீவிரமாக போக கட்டளையிட்டார் வண்டியிலிருந்து இறங்கி சோபாவில் உட்கார்ந்த சில நிமிடத்திலேயே தன் மனைவியிடம் விடைப்பெற்று மூச்சு அடங்கிறது.

அரேபிய நாட்டில் **பெஹரின்** நாட்டுக்கு தன் மனைவியுடன் வேலையில் சேர்ந்தார். ஆரம்ப காலத்தில் ஐக்கிய தமிழ் திருசபையின் ஆரம்ப தூண்களில் ஒருவர் என்று கூறலாம்.

பெஹரனில் அந்த நாட்களில் நான் பிரசங்கித்த பிரசங்கத்தை கேட்டு இனி **பெஹரின் தமிழ் சபை** இந்திய மிஷனரிகளை தாங்கும் சபையாக மாறும் என் உறுதியடுத்த சபை நிர்வாகிகளுடன் தன்னையும் இணைத்து கொண்டு மிஷனரி ஊழியத்தில் தனி ஆர்வம் காட்டினார். இந்தியாவிலும் கிராம ஊழியங்களை தொடங்கி என்னையும் அழைத்து சில கிராமங்களில் ஊழியம் செய்ய ஏற்பாடு செய்தார். அங்கெல்லாம் இப்போது ஆலயம் கட்டப்பட்டு ஆராதனை நடக்கிறது.

இவர் மனைவியும் இந்த ஊழியத்தில் மிகவும் ஒத்துழைத்தார். இவருக்கு பிள்ளைகள், பேர பிள்ளைகள் உண்டு. வெல்லூர் CMC மெடிக்கல்காலேஜில் **டென்டல் டெக்னிஷியன்** படிப்பு படித்திருந்தாலும் **பெஹரனில்** ஸ்டால் NO.1 ல் Book Stall மேனேஜராக மரித்த சகோ. கிருபையன் அவர்களோடு பணியாற்றி இரகசியமாக கிறிஸ்தவ வேதங்கள், கிறிஸ்தவ புத்தகங்களை பயணிகளுக்கு அவரவர் பாஷையில் கொடுத்து சிறிய ஊழியமாக செய்தார்.

என் இனிய ஆவிக்குறிய நண்பனும் ஆவிக்குறிய சகோதரனுமாக பழகிய நாங்கள் பலமுறை ஜெபத்தில் ஐக்கியபட்டியிருக்கிறோம். என் கூட்டங்கள் எங்கு நடந்தாலும் இந்தியாவில் இருந்தால் வந்து கலந்துக்கொள்வார்.

அவர் அடக்க ஆராதனையில் பெஹரின் சபை சார்பாக பலர் வந்து பாடல்கள் பாடி ஆராதனையில் கலந்து கொண்டார்கள்.

கர்த்தர் தாமே சகோதரனுடைய மனைவி, பிள்ளைகள் குடும்பத்துக்கு ஆறுதல் அளிப்பாராக. சகோதரனுடைய ஊழிய பங்குக்காக தேவனை துதிக்கிறேன்.



## MONEY TRANSFER

**வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிறவர்கள் கவனிக்கவும்:**

வங்கி **பாஸ் புக்கில்** பணம் அனுப்புகிற **உங்கள் பெயர்** குறிக்கப்படுவதில்லை. ஆகவே இனிமேல் நீங்கள் **வங்கி** மூலம் பணம் அனுப்பிய உடன் **கீழ்காணும் விவரங்களோடு** கீழே குறிப்பிட்டுள்ள **கைப்பேசி** எண்ணில் SMS செய்ய கேட்டுக் கொள்கிறேன். இது நீங்கள் Email (or) கடிதம் மூலம் பணம் அனுப்பிய விவரத்தை எனக்கு அறிவிப்பதை விட உங்களுக்கு எளிதாக இருக்கும் பணம் வந்து சேர்ந்த விவரத்தை நான் அறிந்த உடனே நீங்கள் குறிப்பிட்டுள்ள உங்கள் கைபேசி வழியாக நான் உங்களுக்கு அறிவிக்க முடியும். **Mob: 9894261333**

| உங்கள் பெயர்: | கைபேசி எண்.: | உங்கள் ஊர்: | அனுப்பிய தொகை: |
|---|---|---|---|

எந்த வங்கியில் எனக்கு அனுப்பினீர்கள் என்றும் (SBI அல்லது Canara Bank), உங்கள் கைப்பேசி எண்: ஆகிய இவைகளை மேலே குறிப்பிட்ட கைப்பேசி எண்ணுக்கு SMS செய்துவிட்டால் நீங்கள் அனுப்பிய பணத்தொகை **என் அக்கவுன்டுக்கு** வந்து சேர்ந்ததா என்று பார்த்து **பணம் கிடைத்த விவரத்தை** உங்களுக்கு உடனே அறிவிக்க முடியும். அப்படியே **கைப்பேசியில்** உங்கள் பிரச்சனைகளை விசாரிக்கவும் உடனே ஜெபிக்கவும் இயலும். மேலே குறிப்பிட்ட **மொபைல் எண்ணை** SMS **அனுப்ப மட்டும்** பயன்படுத்திக் கொள்ளுங்கள். **கைபேசி வழியாக என்னோடு பேச முயற்சிக்க வேண்டாம்.** மற்றபடி கடிதம் மூலம், E-mail மூலம் என்னோடு தொடர்பு கொள்ளலாம். MO, செக், DD மூலம் அனுப்புவர்கள் வழமையாக **ஆவியானவர் ஏவினால்** மட்டும் எனக்கு காணிக்கை அனுப்பலாம். உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன். தொடர்ந்து உங்கள் காணிக்கை உதவிக்கு மிக்க நன்றி.

**- Dr. Pushparaj**

**APRIL - 2019**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.